இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 185 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 02 – வெள்ளிக்கிழமை 14 பிப்ரவரி 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 185: Thiruvalluvar Year - 2056 - Maasi 02 - Friday 14 February 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## தமிழ்நாடு முழுவதும் குறைந்த விலையில்

# 1000 இடங்களில் "முதல்வர் மருந்தகங்கள்" திறப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் வரும் 24ஆம் தேதி தொடங்கி வைக்கிறார்!

சென்னை, பிப்.14-

**தமிழ்நாடு முழுவதும் குறைந்த விலையில் 1000 இடங்களில் 'முதல்வர் மருந்தகங்கள்' திறக்கப்படுகிறது. பிப். 24ந் தேதி சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தத் திட்டத்தை தொடங்கி வைக்கிறார்!.**

சென்னையில் மட்டும் 33 இடங்களில் மருந்தகங்கள் திறக்கப்படுகிறது. இங்கு குறைந்த விலையில் மருந்து மாத்திரைகள் கிடைக்கும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.08.2024 அன்று சுதந்திர தின விழா உரையின் போது குறைந்த விலையில் (ஜெனரிக்) மருந்து மாத்திரைகளையும் பிற மருந்துகளையும் பொது மக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் முதற் கட்டமாக 1,000 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்படும்" என்று அறிவித்தார்.



இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவது தொடர்பாக 29.10.2024 அன்று முதலமைச்சர் தலைமையில் ஆய்வுக் கூட்டமும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதல்வர் மருந்தகங்கள் அமைக்க மேற்கொள்ளப்பட்ட பணிகள், மாவட்ட மருந்து சேமிப்புக் கிடங்குகள் அமைத்தல் உள்ளிட்ட ஏற்பாடுகள் குறித்து கூட்டுறவுத்துறை மற்றும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தைச் சேர்ந்தோருக்கு உரிய அறிவுரைகள் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து மக்கள் மருந்தகங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தது. இதற்காக 2000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கூட்டுறவு துறைக்கு வந்திருந்தது. அதில் தகுதியான மனுக்கள் தேர்வு செய்யப்பட்டு வந்தது. இதில் இதுவரை 840 விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்ததாக ஏற்கப்பட்டு உள்ளது. இவர்களுக்கு கடைகளை ஒதுக்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது. கூட்டுறவுத்துறைக்கு வந்துள்ள மற்ற மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தமிழ்நாடு முழுவதும் 1000 இடங்களில் முதல்வர் மருந்தகங்களை திறப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதைத்தொடர்ந்து சென்னையில் வரும் 24ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வர் மருந்தகங்களை தொடங்கி வைக்க உள்ளார்.

இதில் சென்னையில் மட்டும் கொளத்தூர், தியாகராயர் நகர், ஆழ்வார்ப்பேட்டை உள்பட 33 இடங்களில் மருந்தகங்கள் திறக்கப்படுகிறது. இங்கு குறைந்த விலையில் மருந்து மாத்திரைகள் கிடைக்கும்.

> **சென்னையில் வரும் 24ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வர் மருந்தகங்களை தொடங்கி வைக்க உள்ளார்.**
>
> **இதில் சென்னையில் மட்டும் கொளத்தூர், தியாகராயர் நகர், ஆழ்வார்பேட்டை உள்பட 33 இடங்களில் மருந்தகங்கள் திறக்கப்படுகிறது. இங்கு குறைந்த விலையில் மருந்து, மாத்திரைகள் கிடைக்கும்.**

முதல்வர் மருந்தகத்திற்குத் தேவையான ஜெனரிக் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும். மருத்துவம் சார்ந்த இதர மருத்துவ உபகரணங்கள், சித்தா, ஆயுர்வேதம், இம்காப்ஸ், டாம்கால் மற்றும் யுனானி மருந்துகள், சர்ஜிக்கல்ஸ் மற்றும் நியூட்ராசூட்டிக்கல்ஸ் உள்ளிட்ட மருந்து வகைகள் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதல்வர் மருந்தகம் அமைக்க விருப்பமுள்ள பிபார்ம், டி பார்ம் சான்று பெற்றவர்கள் அல்லது அவர்களின் ஒப்புதலுடன் மருந்தகம் அமைக்க விருப்பம் உள்ளவர்கள் கூட்டுறவுத்துறை மூலம் www.mudhalvarmarumthagam.tn.gov.in இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் செய்யும் வழிமுறைகள், தேவையான ஆவணங்கள் மற்றும் திட்ட விவரங்களை இணைய தளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## தமிழ்நாடு அரசு சார்பில் தொடரப்பட்ட

# ஆளுநர் ரவிக்கு எதிரான வழக்கில் உச்சநீதிமன்றம் 12 கேள்விகள்!

## பதிலளிக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவு!

புதுடெல்லி, பிப். 14 -

ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்குகள் மீது கடந்த 10 ஆம் தேதி விசாரணை முடிந்ததை தொடர்ந்து தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்போது அதன் எழுத்துப்பூர்வ உத்தரவு வெளியாகி உள்ளது. அதில் உச்ச நீதிமன்றம் ஒன்றிய அரசுக்கு 12 கேள்விகளை எழுப்பியுள்ளது.

மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்பிய பிறகு, மீண்டும் அந்த மசோதாவை திருத்தங்கள் செய்தோ, அல்லது திருத்தங்கள் இல்லாமலோ நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பும் போது அந்த மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப ஆளுநர் முடிவு எடுக்க முடியுமா? என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

மேலும், மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு அனுப்ப வேண்டும் என்று ஆளுநர் முடிவெடுக்கும் போது, அது அனைத்து விதமான மசோதாக்களுக்கும் பொருந்துமா அல்லது மாநில அரசுக்கு அப்பாற்பட்ட விவகாரங்களாக கருதப்படும் குறிப்பிட்ட சில மசோதாக்களுக்கு மட்டும் பொருந்துமா? மசோதாக்கள் மீது முடிவு எடுக்கும்போது, அரசியல் சாசன பிரிவு 200ன் கீழ் ஆளுநர், அமைச்சரவையின் ஆலோசனையைக் கேட்டு நடக்க வேண்டுமா அல்லது தனிப்பட்ட முடிவை எடுக்க முடியுமா?



தனிப்பட்ட அதிகாரம் என்பதன் கருப்பொருள் என்ன? என்றும் வினா எழுப்பியுள்ளது. அரசியல் சாசன பிரிவுகள் 111, 200 மற்றும் 201 ஆகியவற்றால் அது உறுதி செய்யப்படுகிறதா? அரசியல் சாசனப் பிரிவு 200ன் கீழ் மசோதா மீதான முடிவுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் ஆளுநர் தெரிவிக்க வேண்டும் எனக் கூற முடியுமா? அரசியல் சாசன பிரிவு 200கீழ் நான்கு முடிவுகளை மேற்கொள்ள ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா?

சட்டப்பேரவையில் இரண்டாவது முறை நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு அனுப்பிவைக்கப்படும் போது, மசோதா மீதான ஒப்புதலை கட்டாயம் வழங்க வேண்டுமா? என்பன உள்ளிட்ட 12 கேள்விகளை ஒன்றிய அரசுக்கு உச்ச நீதிமன்றம் எழுப்பி உள்ளது. இந்த கேள்விகளுக்கு ஒன்றிய அரசு தனது எழுத்துப்பூர்வ வாதங்களை ஒரு வாரத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதேபோல், தமிழ்நாடு அரசும் பதில் வாதங்களை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்ய வேண்டும் என்று உச்சநீதி மன்றம் தெரிவித்துள்ளது.

---

## சென்னை ஐ.சி.எஃப்.பில் முதல் ஏ.சி. மின்சார ரயில்!

சென்னை, பிப். 14 -

தெற்கு ரயில்வேயில், சென்னை ரயில்வே கோட்டத்துக்கான முதல் ஏசி மின்சார ரயில் தயாரிக்கும் பணி ஐ.சி.எஃப்.பில் நிறைவடைந்துள்ளது.



சென்னை - கடற்கரை - செங்கல்பட்டு வழித்தடத்தின் விரைவுப் பாதையில் ஏ.சி. மின்சார ரயில் இயக்க ரயில்வே வாரியத்திடம் தெற்கு ரயில்வே கடந்த 2019ம் ஆண்டு பரிந்துரை செய்தது.

இதையடுத்து, ஏசி மின்சார ரயில்களை தயாரித்து வழங்க சென்னை ஐ.சி.எஃப்.க்கு ரயில்வே வாரியம் உத்தரவிட்டது.

அதன்படி, 12 பெட்டிகள் கொண்ட ஏசி மின்சார ரயில் தயாரிப்பு பணி கடந்த மாதம் தொடங்கி, நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இப்பணி தற்போது நிறைவடைந்துள்ளது.

---

## விவசாய விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க வலியுறுத்தி

# பஞ்சாப் - அரியானா எல்லையில் விவசாயிகள் போராட்டம்!

## 3வது நாளாக தொடர்கிறது!

கனோரி, பிப். 14-

விளைப்பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், அரியானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் விவசாயிகள் ஓராண்டாக போராடி வருகின்றனர்.

இருப்பினும், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்க ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

இதனால் விவசாயிகள் தங்களது போராட்டத்தை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். அந்தவகையில், தற்போது ஒன்றிய அரசுக்கு எதிராக மகா பஞ்சாயத்து போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

ராஜஸ்தான் அரியானா எல்லையான ரத்னபுராவில் செவ்வாய்க்கிழமை இந்த போராட்டம் தொடங்கப்பட்டது.

இந்நிலையில், 2வது நாளான நேற்று முன்தினம் பஞ்சாப் அரியானா எல்லையான கனோரியில் விவசாயிகள் மகா பஞ்சாயத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 3வது நாளாக நேற்று சம்பு எல்லையில் விவசாயிகள் போராட்டம் நடைபெற்றது.

ஒன்றிய அரசுடன் 14 ஆம் தேதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில், கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், பிப்ரவரி 25ஆம் தேதி முதல் மீண்டும் டெல்லி முற்றுகை போராட்டம் தொடங்கப்படும் என்று விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

---

## 40 லட்சம் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நிதியை விடுவித்திடுக!

# ரூ.2,152 கோடியை ஒன்றிய அரசு உடனே விடுவிக்க வேண்டும்!

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தல்!

சென்னை, பிப்.14 -

40 லட்சம் மாணவ, மாணவிகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு நிதியை உடனே விடுவிக்க வேண்டும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

மாநில அளவிலான வானவில் மன்றப் போட்டிகள் மற்றும் அறிவியல் கண்காட்சி சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின் செய்தியாளர்களைச் சந்தித்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்திட்டத்தின் கீழ், 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான ரூ.2 ஆயிரத்து 152 கோடி நிதியை ஒன்றிய அரசு விடுவிக்காமல் காலம் தாழ்த்தி வருவதாக குற்றம்சாட்டினார்.

எனவே, 40 லட்சம் மாணவ, மாணவிகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு நிதியை உடனே விடுவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.